# உங்கள் மருத்துவருடன் நீங்கள்

**01**
நீங்கள் மருத்துவரிடம் செல்லும் போது அங்கிருக்கும் ஏனைய நோயாளர்களின் நிலை பற்றியும் சிந்தியுங்கள்.

**02**
உங்களது கடந்தகால மருத்துவ அறிக்கைகளையும், தற்பொழுது உபயோகிக்கும் மருந்துகளையும், மருந்துகளுக்கு ஒவ்வாமை இருப்பின் அது பற்றிய தகவல்களையும் எடுத்துச் செல்லுங்கள்.

**03**
உங்கள் மருத்துவர் சொல்லுவதை கவனமாகக் கேளுங்கள். கூறுவது தெளிவாக இல்லாவிடில் மற்றெருமுறை கேட்டுஅறியுங்கள். மருத்துவரிடம் செல்லும்போது உங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரை அல்லது நண்பரை அழைத்துச் செல்வது நல்லது.

**04**
நீங்கள் கர்ப்பவதியாகவோ அல்லது பாலூட்டும் தாயாகவோ இருந்தால் அதுபற்றி உங்கள் மருத்துவருக்குத் தெரியப்படுத்துங்கள்.

**05**
மருந்துக் கடையிலிருந்து நீங்கள் மருந்துகள் வாங்கும் போது கீழ் கண்டவற்றை அவதானியுங்கள்.

- மருந்தின் பெயர் (மருத்துவப் பெயரே அன்றி வியாபாரப் பெயரையல்ல)
- மருந்து காலாவதியாகும் திகதி

**06**
என்னஅளவில், எவ்வளவு கால இடைவெளியில், எவ்வளவு காலத்திற்கு, மருந்துகளை உபயோ-கிக்க வேண்டும் என்பதை உங்கள் மருத்துவர் கூறிய அறிவுரைக்கு இணங்க பின்பற்றுங்கள். இடைநவில் நிறுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**07**
பரசிட்டமோல் போன்ற சாதாரண வலி நிவாரணிகள் தவிர்ந்த ஏனைய மருந்துகளை எப்பொழுதும் மருந்துச் சிட்டையைக் கொடுத்தே வாங்குங்கள்.

**08**
பழைய மருந்துச் சிட்டைகளைக் கொடுத்து மருந்து வாங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

**09**
மற்றவர்களுக்கு சிபார்சு செய்யப்பட்ட மருந்துகளை நீங்கள் உபயோகிப்பதையும்,உங்களுக்கு சிபார்சு செய்யப்பட்ட மருந்துகளை மற்றவர்களுக்கு வழங்குவதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

**10**
மருந்துகளை உபயோகிக்கும்போது உங்களுக்கு ஏதாவது அசௌகரியம், ஒவ்வாமை, எதிர்விளைவு ஏற்பட்டால் அல்லது உடல்நிலை மோசமானடந்தால் மருந்தை உடனடியாக நிறுத்திவிட்டு உங்கள் மருத்துவருக்கு அறிவியுங்கள்.

**11**
ஒரு விசேட மருத்துவ நிபுணரிடம் ஆலோசனைக்கு செல்ல முன்னர் உங்கள் மருத்துவரிடமிருந்து அதற்கான கடிதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**12**
அவ்வாறே மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லும் போதும் மருத்துவரிடமிருந்து அதற்குரிய சிட்டையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**13**
வேலைப்பளு காரணமாக களைத்திருக்கும் மருத்தவரைத் தவிர்ப்பது உங்களுக்கு நன்மை பயக்கும்.

## உங்கள் மருத்துவருடன் ஒத்துழைப்பதுஉங்கள் நன்மைக்கே.

College of General Practitioners of Sri Lanka
Project of the Committee on Patient Safety and Safety in Practice
Funded by State Pharmaceuticals Corporation